மனுதாரர் திரும்ப அழைக்கப்பட்டு மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:

இறந்து போன என் கணவருக்கு நானும் மற்ற மனுதாரர்களும் மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்களும் வாரிசுகள் என்றால் சரிதான். மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்கள் என் கணவரின் பெற்றோர்கள். என் கணவருக்கு கிடைத்த ஓய்வூதிய மற்றும் இதர பலன்கள் எனக்கும் என் குழந்தைகளுக்கும் மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்களுக்கும் சமமாக பகிர்ந்து அளிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் என் கணவரின் இறப்புக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகையிலிருந்து எனக்கும் என் குழந்தைகளுக்கும் மற்றும் 3 மற்றும் நான்காம் எதிர்மனுதாரர்களுக்கும் சரிசமமாக தொகை கிடைப்பதற்கு எனக்கு ஆட்சேபனை உண்டு. அவ்வாறு நான் கூறுவது தவறு என்றும் மூன்று மற்றும் நான்காம் எதிர்மனுதாரர்களுக்கு சட்டப்படி வாரிசு என்ற முறையில் இழப்பீடு கிடைக்க தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

இரண்டாம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை

நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன். என் கணவர் அரசு போக்குவரத்து கழகத்தில் பணி நியமிக்கப்பட்டதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் அரசு போக்குவரத்து கழகத்தில் நிரந்தரமாக பணிபுரியவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தன்று என் கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் என் கணவருக்கு சொந்தமானது. அதற்குரிய வாகன பதிவேட்டுச் சான்றை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தன்று என் கணவர் ஓட்டி வந்த வாகனமானது என் கணவருக்கு சொந்தமானது இல்லை என்றால் சரியல்ல. என் கணவர்

ஓட்டி வந்த வாகனத்தில் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. நான் என் கணவர் ஓட்டி வந்த வாகனத்தை காப்பீடு செய்த காப்பீட்டு நிறுவனத்திலிருந்து எந்த இழப்பீடும் பெறவில்லை. என் கணவர் **2015** ஆம் ஆண்டு முதல் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை செய்தார். என் கணவர்



தவறான திசையில் வாகனத்தை ஒட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அவரே யுவத்துக்கு பொறுப்பாளி என்றும் சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கூறியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றும் அந்த இழப்பீடு கிடைக்கத்தக்கதில்லை என்றும் சொன்னாள் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை